தாம்பரம் கோட்டம், பல்லாவரம் நகராட்சி பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி.பி.அமுதா, இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப ஆகியோர் உடனிருந்தனர்.

தாம்பரம் கோட்டம், பல்லாவரம் நகராட்சி, குரோம்பேட்டை நியூ காலனிகள் மழைநீர் வடிகால்களை பார்வையிட்ட அமைச்சர் வடிக்கால்களில் தண்ணீர் தேங்காத அளவிற்கு விரைவில் வடியும் வகையில் வடிக்காலில் ஆரம்பத்திலிருந்து முடியும் இடம் வரை முறையாக அடைப்புகளை நீக்கி தண்ணீரை வடிய செய்ய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் திருமலைநகர் வடக்கு விரவு பகுதிக்கு சென்ற அமைச்சர் அங்கு மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளை பார்வையிட்டார். அங்கு பொதுபணித்துறை வாய்காலில் தண்ணீர் வேகமாக வடிந்தாலும், வடிகால் குறுகளாக இருப்பதால் விரைந்து தண்ணீர் வடியாமல் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, வடிகாலை அகலப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், பழைய பல்லாவரம் சாமி மலைத்தெருவில் தேங்கியுள்ள தண்ணீர் இன்ஜின் மூலம் வடிகாலில் தண்ணீர் வடிய வைப்பதை பார்வையிட்ட அமைச்சர் மற்றும் ஒரு டீசல் இன்ஜின் வைத்து தண்ணீர் இறைத்து தேங்கியுள்ள தண்ணீர் விரைவாக வடிவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கீழ்க்கட்டளை காசி விசாலாச்சிபுரத்தில் மழைநீர் தேங்கியுள்ளதை பார்வையிட்ட அமைச்சர் பொதுமக்களிடம் மழைநீர் விரைந்து வடிவதற்கு தமிழக அரசினால் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் போர் கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது பொதுமக்களும் அரசின் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். வடிகால்களில் பொதுமக்களில் சிலர் ஆக்கிரமிப்புகளை ஏற்படுத்துவது தான் தண்ணீர் விரைந்து வடியாமல் இருப்பதற்கு காரணமாக இருக்கிறது. ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து அகற்றப்பட்டு தேங்கியுள்ள பகுதிகளில் தண்ணீர் விரைந்து வடிவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து பகுதிகளிலும் இத்தகைய சூழல் மீண்டும் ஏற்படாமல் இருக்க திட்டம் செயல்படுத்தப்பட்டு தீர்வு காணப்படும் என தெரிவித்தார். பின்னர் நாராயணபுரம் ஏரியில் உபரிநீர் விரைந்து வடிவதற்கு வடிகால்கள் தூர் வாரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் பயிற்சி அங்குர்லாதர்,இ.ஆ.ப, முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு.தன்சிங், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு.இளங்கோ, மண்டல பொறியாளர் திரு.முருகேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.